பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 26 | புதன்கிழமை | 10.09.2025 | அதிர்வு 040

## சர்வதேசத்தை நாடுவதை தவிர வேறு வழியில்லை

### தமிழரசுக் கட்சி திட்டவட்டம்

"ஆயுதப் போராட்டம் முடிவடைந்து பதினாறு ஆண்டுகளான போதும், எந்த 07



# '13' இன் முழு அமுலாக்கம் மாகாண சபைத் தேர்தல்கள்

## ஜெனிவா பிரேரணையில் வலியுறுத்தல்

இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 60ஆவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படவிருக்கும் பிரேரணையில் இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதன் மூலம் உள்ளூர் நிர்வாகத்தை மதிக்கவும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் உட்பட அனைத்து மாகாண சபைகளும் இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின்படி திறம்படச் செயல்படுவதை உறுதி செய்யவும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி வேண்டும் வாசகங்கள் இடம்பெற்றுள்ளன. 06

# இலங்கை ஜனாதிபதி ரில்வினா?

## நாடாளுமன்றில் சாணக்கியன் கேள்வி

(ந.லோகதயாளன்)

"அரசாங்கத்தின் முக்கிய முடிவுகளை ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவே வெளியிடுகின்றார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முடிவுக்கு மாறான விடயங்களை அவர் அறிவிக்கின்றார். அதுவே அரசின் முடிவாக வெளிவருகின்றது. அப்படியானால் நாட்டின் ஜனாதிபதி ரில்வின் சில்வாவா?"

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் இலங்கை அரசு செய்து கொண்டுள்ள வர்த்தக 08






ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக இம்முறை நிறைவேற்றப்படவிருக்கும் பிரேரணையின் நகல் வடிவம் வெளிவந்துவிட்டது. இனி நடைபெறக் கூடிய நாடுகளின் கலந்துரையாடலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில திருத்தங்கள் செய்யப்படக் கூடும். ஆயினும் பெரும்பாலும் இப்போது இருக்கின்ற நகல் வடிவம் அப்படியே தொடரும் என்றே தெரிகிறது.

சர்ச்சைக்குரிய பல விடயங்கள் கடைசியாக குறிப்பிட்ட 13ஆவது பந்தியில் நாசூக்காக கோடி காட்டப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான விடயத்தில் முன்னைய 51/1 இலக்கத் தீர்மானத்தின் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கவுன்ஸில் வழங்கிய அல்லது அவரைச் செய்யும்படி கோரிய எல்லா வேலைகளும் தொடரும் என்று இந்த நகல் பிரேரணை குறிப்பிடுகின்றது.

அதன்படி –

இலங்கையில் மீள் நல்லிணக்கம், 06

# இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை

## எல்பிட்டியவில் கொடூரம்



இளைஞர் ஒருவர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை காலி, எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனேகொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கனேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய இளைஞரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞருக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரைக் கைது செய்வது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வெலிகந்தையில் கராஜில் இருந்து நாற்பது தோட்டாக்கள் கைப்பற்றல்

பொலனறுவை, வெலிகந்தை, நாமல்கம பகுதியில் உள்ள வீடொன்றின் கராஜுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 40 தோட்டாக்கள் வெலிகந்தை பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

வெலிகந்தை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்தத் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தக் கராஜின் உரிமையாளர் 5 வருடங்களுக்கு முன்னர் இந்தக் கராஜை மற்றுமொரு நபருக்கு விற்பனை செய்து பிரதேசத்தை விட்டுச் சென்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வாவியில் மூழ்கி குடும்பஸ்தர் பலி!

வாவியில் நீராடிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அம்பாறை, பண்டாரதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவகிரியாவ வாவியில் நீராடிக்கொண்டிருந்த குடும்பஸ்தரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மாபலகம பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பண்டாரதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் நண்பர்களுடன் இணைந்து நவகிரியாவ வாவியில் நீராடிக்கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









# சத்துருக்கொண்டான் இனப்படுகொலையின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு

## மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் இனப்படுகொலையின் 35 ஆண்டு நினைவேந்தல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானன் இனப்படுகொலையின்35ஆவதுஆண்டு நினைவேந்தல் சத்துருக்கொண்டான் நாற்சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபியில் நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது .

தூபிக்கு மாலை அணிவித்து, சுடர் ஏற்றி,மலர்தூவி இரண்டுநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 1990ஆம் ஆண்டு செட்டெம்பர் 9 ஆம் திகதி சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பனிச்சையடி போன்ற பிரதேசங்களை இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல்படையினர் சுற்றிவளைத்து அங்கிருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட 186 பேரை போயிஸ் ரவுண் இராணுவ முகாம் பகுதிக்கு அழைத்து சென்று அவர்களை வெட்டியும் துப்பாக்கியால் சட்டும் படுகொலை செய்து ரயர்கள் போட்டுஎரித்தனர் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவேந்தலே நினைவு தூபியில் இடம்பெற்றது. அதில் மட்டு மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன், பிரதி முதல்வர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், முன்னாள் மாநகரசபை முதல்வர் ரி.சரவணபவன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள்,படுகொலசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதனை தொடர்ந்து 4 கிராமங்களை சேர்ந்த 4 பேர் ஒன்றிணைந்து பொது சுடர் ஏற்றியதையடுத்து அங்கிருந்த அனைவரம் சுடர் ஏற்றி, படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்மசாந்தி வேண்டி மலர்தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்திய பினனர், படுகொலை செய்யப்பட்ட இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியில் அகழ்வுப் பணியை முன்னெடுக்குமாறும் சர்வதேச நீதி விசாரணை வேண்டும் எனவும் ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்தனர்.









# போதைப்பொருள் கலாசாரம் நாட்டில் முற்றாக ஒழிக்கப்படும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதி



எவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற போதிலும், நாட்டில் போதைப்பொருள் கலாசாரம் முற்றாக ஒழிக்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் தலைவர்கள் போதைப்பொருள் வர்த்தகர்கள் குறித்து நாடாளுமன்றத்தில் அதிகம் பேசப்படுகின்றது.

அதனை நோக்கும்போது, இங்கு கருத்து தெரிவிப்பவர்கள் பொலிஸில் அங்கம் வகித்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

போதைப்பொருள் கொள்கலன் எங்கிருந்தது? எவ்வாறு வந்தது என எவ்வித அறிவித்தலையும் அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை.

ஆனால், அது பற்றி நாடாளுமன்றத்தில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும், இதன் பின்னணியிலுள்ள ஆபத்து மற்றும் அபாயகரம் பற்றி எவரும் கருத்து தெரிவிப்பதில்லை.

எங்களது தரப்பினர் சந்திக்கும் ஒவ்வொரு தாய்மாரும் இந்த போதைப்பொருள் வியாபாரத்தை ஒழிக்குமாறே கோரிக்கை விடுக்கின்றனர்.

தங்களுடைய பிள்ளைகளை இந்த போதைப்பொருள் கலாசாரத்தில் இருந்து மீட்டுத்தருமாறே எம்மிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமையவே இந்த போதைப்பொருள் கலாசாரத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்." என்றார்.

# நேபாளத்திலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம்

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தகவல்



நேபாளத்தில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

காத்மண்டு மற்றும் பிற பகுதிகளில் நிலவும்பதற்றமானசூழ்நிலைகாரணமாக நேபாளத்தில் வசிக்கும் இலங்கை குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் நலன் குறித்து அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி, நேபாளத்தில் வசிக்கும் எந்தவொரு இலங்கையருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது.

அத்துடன் 22 இலங்கை மாணவர்கள் உட்பட 99 இலங்கையர்கள் நேபாளத்தில் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அனைத்து குடிமக்களுடனும் தொடர்ச்சியான தொடர்பைப் பேணுவதற்காக இலங்கை தூதரகம் அவசர தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தேவையான உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நேபாளத்திலுள்ள இலங்கையர்கள் தத்தமது குடியிருப்புகளிலேயே இருக்குமாறும், போராட்டங்கள் இடம்பெறும் இடங்களுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா குறிப்பிட்டுள்ளதுடன், ஊரடங்கு உத்தரவைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் ஏதேனும் தேவை ஏற்பட்டால் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த சவாலான சூழ்நிலையில் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பெரும் பங்களிப்பை வழங்கிய, நேபாளத்திலுள்ள இலங்கைத் தூதரக ஊழியர்களுக்கு அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா நன்றித் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், அனைத்து இலங்கையர்களையும் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை புதிய அரசமைப்பு மூலம் நிச்சயம் நீக்கப்படும்

## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும். புதிய அரசமைப்பில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்ட பின்னர் இதற்குரிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகளை நீக்குவதற்கான சட்டமூலம் மஹிந்த ராஜபக்ஷவை இலக்காகக் கொண்டு முன்வைக்கப்பட்டதல்ல. அது ஓய்வுபெற்ற அனைத்து ஜனாதிபதிகளுக்குப் பொதுவானதாகும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அரசமைப்பு திருத்தத்தின் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு மக்கள் எமக்கு ஆணையை வழங்கியிருக்கின்றனர். எனினும், புதிய அரசமைப்புக்கான நடவடிக்கைகளை நாம் இன்னும் ஆரம்பிக்கவில்லை.

அதற்குச் சற்று காலம் எடுத்துக் கொள்வதில் பிரச்சினையில்லை என்று நினைக்கின்றோம். ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருட காலம் மாத்திரமே கடந்துள்ளது. அரசு பதவியேற்று பத்து மாதங்களே ஆகின்றன. எனினும், நாட்டின் அபிவிருத்திக்கான பல்வேறு அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் முதலில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதே எமது இலக்காகும்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இவற்றுக்கிடையில் ஊழல், மோசடிகளுக்கு எதிரான சுற்றிவளைப்புக்களிலும் அரசு ஈடுபட்டு வருகின்றது. சர்வதேசத்தின் நம்பிக்கையையும் பெற்று வருகின்றோம். இவற்றுக்கு மத்தியில் புதிய அரசமைப்புக்கான நடவடிக்கைகளையும் விரைவில் ஆரம்பிப்போம்.

அதன் அடிப்படையிலேயே தற்போது முன்னாள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகளை நீக்குவதற்கான சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளால் திறைசேரிக்கு ஏற்படும் சுமை, அதனால் அதிகரிக்கும் மறைமுக வரி என்பவற்றால் தான் மக்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர்.

எனவேதான் அதனை நீக்குவதற்கான சட்டமூலத்தைச் சமர்ப்பித்துள்ளோம். இதற்கு எதிராக ஒரு தரப்பினர் நீதிமன்றம் சென்ற போதிலும், அதனை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நாடாளுமன்றத்தில் சகல உறுப்பினர்களும் இதற்கு ஆதரவான வாக்களிப்பர் என்று நம்புகின்றோம்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளுக்காக திறைசேரி பெரும் சுமையை சுமக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் எண்ண வேண்டிய தேவை அவற்றுக்கு இல்லை என்று நினைக்கின்றோம். வாக்களிப்பின் போது இது தொடர்பில் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடுகளை அறிந்து கொள்ள முடியும். இது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மாத்திரம் இலக்கு வைத்து அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட மூலமல்ல.

சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் சகல முன்னாள் ஜனாதிபதிகளும் அதற்கமைய செயற்படுவர் என எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்புக் கூறல், மனித உரிமைகளை மேம்படுத்தும் செயற்பாடாக, இலங்கையில் யுத்தத்தின் போது இடம்பெற்ற விவகாரங்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம் மேற்கொண்டு வரும் சாட்சியங்கள், சான்றுகள், ஆவணங்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் பணி தொடர்ந்து நடைபெறும்.

அந்த விடயம் இப்போதைய பிரேரணை நகலில் விசேடமாகக் குறிப்பிடப்படாவிட்டாலும் 51/1 தீர்மானம் மூலம் ஆணையாளருக்கு பணிக்கப்பட்ட பணிகள் இந்த - இப்போதைய - பிரேரணை மூலமும் கோரப்படுகின்றது என்ற வாசகத்தின் மூலம் அந்த வேலையும் தொடரும் என்பது உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இந்த விடயங்களை கொழும்பு கடுமையாக எதிர்த்தாலும், இதற்காக இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்கெடுப்புக்குக் கோரவோ அல்லது அதை சவாலுக்கு உட்படுத்தவோ கொழும்பு முனையாது என்பது நேற்று முன்தினம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் ஆற்றிய உரையின் வரிகளுக்கு இடையே கோடி காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது உத்தேச பிரேரணையை இலங்கை எதிர்த்தாலும், அந்தப் பிரேரணையை நிறைவேற்ற முன்னர் வாக்கெடுப்புக்கு விடுங்கள் என்ற கோரிக்கையை கொழும்பு முன் வைக்காது என்றே கூறப்படுகின்றது. அப்படி முன் வைத்தால் சர்வதேச சமூகத்தில் - இவ் விவகாரத்தில் தனக்குள்ள ஆதரவு நிலை என்ன என்பது அப்பட்டமாக பகிரங்கமாகித் தன் முகத்திரையைக் கிழித்து விடலாம் என்று கொழும்புத் தரப்பு அஞ்சுகிறது. அதனால் இலங்கைக்கு எதிராக வரக் கூடிய பிரேரணையை ஆட்சேபித்தாலும், அதை எதிர்த்து கவுன்ஸிலில் வாக்கெடுப்புக்கு விடும்படி கொழும்பு கோரவே கோராது என்று தெரிகிறது.

\+ + +

சர்வதேச விவகாரங்களில் அதிக பரிச்சயம் உள்ள நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து ஒரு செய்தி அனுப்பி இருந்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று அவர் அந்தச் செய்தியை ஆரம்பித்து இருந்தார். ஆரம்பத்தை வாசித்ததும் நான் திடுக்குற்றேன். சர்வதேச விவகாரங்களில் பரிச்சயமிக்க என் நண்பரா இப்படி எழுதுகிறார் என வியந்தேன்.

ஆனால் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கு நோபல் சமாதான பரிசு ஏன் வழங்க வேண்டும் என்பதற்கு அவர் சொன்ன காரணத்தை தொடர்ந்து வாசித்த போது தான் அவர் முரண் நகையாக என்ன சொல்ல வருகிறார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

உலகின் மிகப்பெரிய சனத்தொகை கொண்ட நாடுகள் என்று கருதப்படும் இந்தியாவும் சீனாவும் 60 ஆண்டுகளாக தங்களுக்குள் பாராட்டி வந்த பகைமையை தனது வரிவிதிப்பு நடவடிக்கை மூலம் களையை வைத்து - அவர்களை - இந்தியாவையும் சீனாவையும் - அத்தோடு சேர்ந்து ரஷ்யாவையும் நட்புறவோடு அணிசேர வழி சமைத்து இருக்கிறார் அமெரிக்க அதிபர். இதற்காக அவருக்கு நோபல் சமாதானப் பரிசைக் கொடுத்தாலும் தகும் என்று என் நண்பர் குறிப்பிட்டு இருக்கிறார்.

## ‘13’ இன் முழு அமுலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை விவகாரத்தைக் கையாளும் பிரதான அனுசரனை நாடுகளான பிரிட்டன், கனடா, மலாவி, மொன்டிநீக்ரோ, வடக்கு மெசிடோனியா ஆகிய நாடுகள் நேற்று இணங்கிய இலங்கை தொடர்பான நகல் பிரேரணையில் இவ்விடயங்கள் இடம்பெற்றிருந்தமை தெரியவந்துள்ளது.

“இலங்கையில் மீள் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்“ என்ற தலைப்பிலான இந்த இந்த நகல் பிரேரணை சம்பந்தப்பட்ட தரப்புக்களின் கலந்தாய்வுகளின் பின்னர் இறுதி செய்யப்படும் எனத் தெரிகின்றது.

இப்போதைய நகலில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்களின் தொகுப்பு வருமாறு:-

செப்டெம்பர் 2024, நவம்பர் 2024 மற்றும் மே 2025 ஆகிய மாதங்களில் முறையே ஜனாதிபதி, நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை சுதந்திரமான மற்றும் வெளிப்படையான ஜனநாயக முறையில் நடத்தியமையை வரவேற்று -

இலங்கை அரசாங்கம் அரசியல் அதிகாரப் பகிர்வு குறித்த தனது உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இது நல்லிணக்கத்திற்கும் அதன் மக்கள்தொகையின் அனைத்து உறுப்பினர்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கும் முக்கியமானதாகும் என்பதையும் சுட்டிக்காட்டி -

மேலும், மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதன் மூலம் உள்ளூர் நிர்வாகத்தை மதிக்கவும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் உட்பட அனைத்து மாகாண சபைகளும் இலங்கை அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின்படி திறம்படச் செயல்படுவதை உறுதி செய்யவும் அரசாங்கத்தை ஊக்குவித்து வலியுறுத்தி -

கடுமையான பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகளை வரவேற்று, இராணுவமயமாக்கல், ஊழல், நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தண்டனை விலக்கு உள்ளிட்ட அந்த நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படை நிர்வாக காரணிகள் மற்றும் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுச் சுட்டிக்காட்டி -

இலங்கையில் உள்ள அனைத்து தனிநபர்களும் மதம், நம்பிக்கை அல்லது இனத் தோற்றம் போன்ற எந்த வகையான வேறுபாடும் இல்லாமல் தங்கள் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிக்க உரிமை உண்டு என்பதையும், மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு அமைதியான மற்றும் ஒருங்கிணைந்த அமைப்பின் முக்கியத்துவத்தையும் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டி -

பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்த்துப் போராடுவதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி -

இலங்கையில் அனைத்து தரப்பினராலும், தமிழீழ விடுதலைப் புலிகளால் செய்யப்பட்ட துஷ்பிரயோகங்கள் உட்பட அனைத்து தரப்பினராலும் செய்யப்பட்ட அனைத்து மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கும் ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி -

பொருந்தக்கூடிய இடங்களில், மனித உரிமைகள் சட்டத்தின் மொத்த மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிப்பது உட்பட, மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் தங்கள் தொடர்புடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கான நாடுகளின் பொறுப்பை நினைவுபடுத்தி -

1. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அதன் ஐம்பத்தெட்டாவது அமர்வில் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாய்மொழி அறிக்கையையும், தற்போதைய அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கையையும் வரவேற்று -

2.இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜூன் 2025 இல் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் இலங்கைக்கு விஜயம் செய்தமையையும், உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் கவுன்ஸிலின் சிறப்பு நடைமுறைகளுடனான அதன் ஈடுபாட்டையும் வரவேற்று, அத்தகைய ஈடுபாடு மற்றும் உரையாடலைத் தொடர ஊக்குவித்து, மேலும் அலுவலகத்தால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயல்படுத்தவும், சிறப்பு நடைமுறைகளால் செய்யப்பட்ட பரிந்துரைகளுக்கு உரிய பரிசீலனையை வழங்கவும் இலங்கையை வேண்டி -

3.இலங்கையில் மனித உரிமைகளை அனுபவிப்பதில் குறிப்பிடத்தக்க தீங்கு விளைவிக்கும் ஊழல் மற்றும் பொருளாதார தவறான நிர்வாகத்திற்கான பொறுப்புக்கூறல் தொடர்பாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை அங்கீகரித்து, மேலும் தற்போதைய மற்றும் முன்னாள் பொது அதிகாரிகள் செய்த ஊழல்கள் உட்பட, விசாரணை மற்றும் தேவைப்பட்டால், வழக்குத் தொடுப்பது உட்பட இந்த விடயத்தில் மேலும் நடவடிக்கையை ஊக்குவித்து -

4. பல தசாப்தங்களாக பிளவுபடுத்தும் இனவெறி அரசியல் மற்றும் இன மோதல்களின் விளைவாக ஏற்பட்ட தீங்குகள் மற்றும் துன்பங்களை அரசாங்கம் ஒப்புக்கொண்டதையும், அனைத்து சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களின் பகிரப்பட்ட வலி மற்றும் துக்கத்தை அங்கீகரித்ததையும், ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கும், சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுப்பதற்கும், பாகுபாடு இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கும் அதன் உறுதிப்பாட்டையும் மேலும் வரவேற்று -

5. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டையும், அதை இரத்துச் செய்வதை ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமித்ததையும் கவனத்தில் கொண்டு, அதே நேரத்தில் அந்தச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல்கள், முக்கியமாக தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு எதிராக தொடர்வது குறித்துக் கவலை தெரிவித்து, மேலும், இந்தச் சட்டத்தின் பயன்பாட்டுக்கு ஒரு தடையை விதிக்கவும், அதை இரத்துச் செய்வதை விரைவுபடுத்தவும், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான எந்தவொரு சட்டமும் சர்வதேச

07

## '13' இன் முழு அமுலா...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்திலிருந்து எழும் அரசின் கடமைகளுக்குமுழுமையாகஇணங்குவதைஉறுதி செய்யவும் அரசாங்கத்தை வலியுறுத்தி –

6. ஒன்லைன் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானஅரசாங்கத்தின்உறுதிப் பாட்டையும், சட்டத்தில்திருத்தங்களைஉருவாக்க ஒரு குழுவை நியமித்ததையும் வரவேற்று, அதே நேரத்தில் இந்தச் சட்டத்தின் நீதித்துறை மேற்பார்வை மற்றும் குற்றங்கள் மற்றும் அமலாக்க அதிகாரங்கள் பற்றிய பரந்த வரையறை இல்லாதது குறித்த கவலைகளை ஒப்புக் கொண்டு, மேலும் கருத்து மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கான அரசின் சர்வதேச கடமைகளுடன் சட்டம் முழுமையாக இணங்குவதை உறுதிசெய்ய அதன் திருத்தத்தை விரைவுபடுத்த அரசாங்கத்தை ஊக்குவித்து –

7.இலங்கையில் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டவர்களின் பல வழக்குகள் தீர்க்கப்படாமல் இருப்பதையும், இதனால் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள நீண்டகால துன்பத்தையும் வெளிப்படுத்தி, இலங்கையில் பல புதைகுழிகள் உள்ள இடங்களை அடையாளம் காண்பதை ஒப்புக்கொண்டு, அவை தொடர்பில் போதுமான வளங்களுடன் தொடர்ச்சியான பணிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் சுயாதீனமான மற்றும் பயனுள்ள செயல்பாட்டின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி, மேலும் சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப தோண்டி எடுக்கும் பணிகளை மேற்கொள்ள போதுமான நிதி, மனித மற்றும் தொழில்நுட்ப வளங்களை உறுதி செய்வதற்கு சர்வதேச ஆதரவை முன்கூட்டியே பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி –

8. பல நீண்டகாலப் பிரச்சினைகளை புதுப்பிக்கப்பட்ட திசையில் அணுகும் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வரவேற்று, மனித உரிமை மீறல்கள் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பான சில அடையாள வழக்குகளில் விசாரணைகள் மற்றும் வழக்குகளை மீண்டும் திறப்பதை ஒப்புக்கொண்டு, சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு இணங்க விசாரணைகள் மற்றும் வழக்குகளை விரைவுபடுத்தவும், திறன்களை வலுப்படுத்த சர்வதேச உதவியைப் பெறவும், பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் முழு பங்கேற்பை உறுதி செய்யவும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி –

9. ஒரு சுயாதீனமான பொது வழக்குத் தொடுநர் அமைப்பை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைப் பாராட்டுடன் ஒப்புக்கொண்டு, மேலும் இது முழுமையாக சுதந்திரமாகவும், பயனுள்ளதாகவும், வலுவாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி, மேலும், கடந்த தசாப்தங்களில் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பான வழக்குகள் தொடர்பாக ஒரு சுயாதீனமான சிறப்பு ஆலோசகரைக் கொண்ட ஒரு நீதித்துறை பொறிமுறையை உருவாக்குவது குறித்து பரிசீலிக்க அரசாங்கத்தை ஊக்குவித்து –

10. மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முழு பங்கேற்புடன், விரைவான, முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை உறுதி செய்வதற்கும், தேவைப்பட்டால், வழக்குத் தொடரவும் இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொண்டு –

11. சிவில் சமூகப் பிரதிநிதிகள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், பத்திரிகையாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், குறிப்பாக பெண்கள் மீதான அனைத்து வகையான துன்புறுத்தல்கள் மற்றும் பழிவாங்கல்களையும் முடிவுக்குக் கொண்டுவர அழைப்பு விடுத்து –

12. இராணுவம் மற்றும் பிற அரசு நிறுவனங்களால் இன்னும் ஆக்கிரமிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தப்படும் நிலங்களை விடுவிப்பதன் முக்கியத்துவத்தையும், தொல்பொருள், மத மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட நில மோதல்களை வெளிப்படையான, ஆலோசனை, பாரபட்சமற்ற மற்றும் பாகுபாடற்ற முறையில் தீர்ப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி –

13. உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரத்தையும், மனித உரிமைகள் கவுன்ஸில் அதன் 51/1 தீர்மானத்தில் கோரிய அனைத்து பணிகளையும் நீடிக்க முடிவு செய்கின்றது. மேலும் அதன் 61ஆம் மற்றும் 64ஆம் அமர்வுகளில் வாய்வழி தெளிவுபடுத்தலையும், அதன் 63 ஆவது அமர்வில் எழுத்துபூர்வ அறிவிப்பையும், அதன் 66 ஆவது அமர்வில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளில் முன்னேற்றம் குறித்த விரிவான அறிக்கையையும் சபைக்கு சமர்ப்பிக்குமாறு அலுவலகத்தைக் கோருகின்றது.

இது (இந்தப் பிரேரணை) ஓர் ஊடாடும் உரையாடலில் விவாதிக்கப்படும்.

– இவ்வாறு நகல் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## சர்வதேசத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இந்தச் சூழலில், பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச ஈடுபாட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள அறிக்கை ஏமாற்றமளிக்கின்றது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வில் வெளியிட்ட அறிக்கைக்குப் பதில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பல முக்கிய கரிசனைகளுக்கு அரசு இன்னும் பதிலளிக்கவில்லை என்பதில் எமது ஆழ்ந்த ஏமாற்றத்தை இங்கு பதிவு செய்கின்றோம்.

இந்த அரசாங்கம் பதவியேற்றபோது பல வாக்குறுதிகளை வழங்கியது. எனினும், ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று ஒரு முழு ஆண்டு ஆன பின்னும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முதல்படி கூட இன்னும் எடுக்கப்படவில்லை.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்தல் நாட்டின் அபிவிருத்திக்கு அவசியம் எனக் கூறினாலும், எளிதில் செய்யக்கூடியவை கூட முயற்சிகள்கூட இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. பல உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை. அந்தச் சட்டத்துக்கு மாற்றாக எந்தப் புதிய சட்டமும் கொண்டு வரமாட்டோம் என்ற உறுதியான நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்திருந்த போதிலும், தற்போது வெளிவிவகார அமைச்சர் பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டம் கொண்டு வரப்படும் என அறிவித்துள்ளார் என்பது வருத்தத்துக்குரியது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம் செய்யப்படும் வரை அதன் பயன்பாட்டில் தற்காலிகமான தடை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளும், உறுதிமொழிகளும் இருந்தும், அது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதேபோன்று, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நீக்கம் செய்ய எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

வெளிநாட்டு நடவடிக்கைகள் தேசிய செயல்முறைகளில் பிளவுகளையும் அபாயத்தையும் ஏற்படுத்தும் என வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளதும், இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதும் மிகவும் கண்டனத்துக்குரியது.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்து பதினாறு ஆண்டுகளான போதும், எந்த உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இந்தச் சூழலில், பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச ஈடுபாட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை.

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் 240 மனித எலும்புக்கூடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை சட்டத்துக்குப் புறம்பான கொலைகளாக இருப்பினும் இங்கு கிடைக்கப்பட்ட சான்றுகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் எதுவும் குறிப்பிடவில்லை. இந்த உயிரிழப்புகளை அடையாளம் காண உள்ளூர் நிபுணத்துவம் இல்லாதது நிதர்சனமான உண்மை. இருந்தும், அரசாங்கம் சர்வதேச உதவியை இன்னமும் கோரவில்லை.

மனிதப் புதைகுழிகள், வலிந்து காணாமல்ஆக்கப்படுதல்போன்றபலவிடயங்களிலும் இதே நிலை தொடர்கின்றது.

அதிகாரப் பகிர்வு குறித்து மீண்டும் வலியுறுத்தியதற்கும், தமிழ் சமூகத்தின் அவாவான சமத்துவம், நீதி, மாண்பு, சமாதானம் ஆகியவற்றுக்காக ஆதரவு வழங்கியதற்கும் இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தியா, மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும், அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

மாறாக, இலங்கை அரசாங்கம் தன் எழுத்திலான பதிலில், எல்லை நிர்ணயிப்பு செயல்முறை முடிந்த பிறகு மட்டுமே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற நிலை எடுத்துள்ளது.

இது பல ஆண்டுகள் தேர்தலைத் தள்ளிவைக்கும் எண்ணப்பாட்டைக் காட்டுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கம் அளித்த வாக்குறுதியை மீறி,

08



# செம்மணி வழக்கில் பெரும் எதிர்பார்ப்பு!

செம்மணிப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த வழக்குத் தவணையின்போது மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பட்ஜட்டைச் சமர்ப்பிக்குமாறும், நிபுணர்களின் இடைக்கால அறிக்கையையும் நீதிவான் கோரியிருந்தார்.

இந்த விடயங்கள் எதிர்வரும் வழக்குத் தவணையின்போது முன்வைக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் நடைபெறும் முதலாவது நீதிமன்ற நடவடிக்கை என்பதாலும், எதிர்வரும் வழக்குத் தவணையில் பெரும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

## சர்வதேசத்தை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களின் வாக்குரிமையைத் தொடர்ந்து உதாசீனப்படுதலைக் காட்டி நிற்கின்றது.

எமது நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் முன்வைத்த தனிநபர் சட்டமூலத்தை அரசாங்கம் உடனடியாக ஒப்புதல் வழங்கி, மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றுள்ளது

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒப்பந்தம் ஒன்றை அங்கீகரிப்பதற்கான பிரேரணையின் மீது உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கேள்வி எழுப்பினார்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆற்றிய உரைக்கு ஆட்சேபம் தெரிவித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், செயலாளரும் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த கடிதத்தின் பிரதியை அவர் தமது உரையில் முழுமையாக வாசித்தார். அதன் பின்னர் அவர் தமது உரையைத் தொடர்ந்தார்.

"அரசாங்கம் வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்ய முன்னர் தனது நாட்டின் மக்களுடன் இணக்கம் காண வேண்டும். இந்த அரசு பதவிக்கு வந்து ஒரு வருடமாகின்றது. ஆனால், தன்னுடைய நாட்டின் பிரஜைகளான தமிழர்களுடன் ஓர் ஒப்பந்தத்துக்கு – இணக்கத்துக்கு – அது இன்னமும் வரவில்லை.

மாகாண சபை தேர்தல்கள் தொடர்பில் அரசு தரப்பு ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிடுகின்றது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான தனிநபர் பிரேரணையை நான் சமர்ப்பித்து பல மாதங்கள் ஆகிவிட்டன. அது தொடர்பின் அரசின் பதிலைக் கேட்டுக் களைத்து விட்டேன். பதில் கூறுவதில்லை என்று அரசு இழுத்தடிக்கின்றது.

மாகாண சபைத் தேர்தல்கள் இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர் நடைபெறும் என்று ஜனாதிபதி கூறினார்.

முன்னைய – விலக்கப்பட்ட – பழைய – தேர்தல் சட்டத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் என்று பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்தார் என சுமந்திரன் தகவல் வெளியிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தத் தேர்தல் நடைபெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவித்திருந்தார்.

ஆனால், அரசாங்கத்தில் இடம்பெறாத – ரில்வின் சில்வாவோ எல்லை நிர்ணயப் பணி முடிந்த பின்னர்தான் மாகாண சபைத் தேர்தல்கள் என்று யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவித்தார்.

இப்போது ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அதையே கூறுகின்றார்.

அப்படியானால் நாட்டில் தீர்மானத்தை எடுக்கும் ஜனாதிபதி பதவியில் இருப்பவர் ரில்வின் சில்வாவா?" – என்று சாணக்கியன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"16 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் மாறி, மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கான நீதியை மறுத்தமை போலவே இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசும் நீதியை மறுப்பதற்கான ஆரம்ப வேலையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் அமர்வில் வெளிவிவகார அமைச்சரின் உரையின் ஊடாகச் சொல்லி இருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்த நாட்டுக்குள் வெளிநாடுகள் அல்லது சர்வதேச நாடுகள் தலையிடுவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனக் கூறியுள்ளார். இந்த நாட்டினுடைய அரசு, அமைச்சர்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை, தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிராகரிக்கின்றார்கள்.

பாதிக்கப்பட்ட சமூகமான தமிழ் மக்கள் ஓர் சர்வதேச விசாரணை வேண்டும், சர்வதேச தலையீடு வேண்டும், சர்வதேச மேற்பார்வை வேண்டும் என்றும், சர்வதேசத்தின் உதவியுடன்தான் உண்மைகள் கண்டறியப்படலாம், சர்வதேசத்தின் ஊடாகத்தான் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றனர்.

கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் மாறி, மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கான நீதியை மறுத்தமை போலவே இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் நீதியை மறுக்கின்றமைக்கான ஆரம்ப வேலைகளை இந்த அமைச்சரின் உரையின் ஊடாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

நாட்டின் ஜனாதிபதி வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்து மைதானங்களைத் திறந்து வைக்கலாம் அல்லது ஆரம்பித்து வைக்கலாம். அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைக்கலாம். இதேபோன்றுதான் கடந்த காலத்தில் ராஜபக்ஷக்கள், மைத்திரி, ரணில் போன்ற அனைத்துத் தலைவர்களும் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்தார்கள். ஆனால், அந்த மக்களுடைய எதிர்பார்ப்பு, தமிழ் மக்களுக்கு இந்த நாட்டிலே நடந்த அநீதிக்கு, இனப் படுகொலைக்கு நீதி வேண்டும், விசாரணைகள் நடத்தப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், அத்தோடு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு வேண்டும் என்பதுதான்.

மேற்படி விடயங்களை இந்த அரசாங்கம் மறுத்தால் தமிழ் மக்களின் எதிர்ப்பை இன்னும் அதிகமாகச் சம்பாதிக்கும்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## போக்கு மாறாத அரசு!

புதிய அரசமைப்பு, அதனூடான தீர்வு ஆகியவற்றுக்கு முன்னர் - அதுவரையில் - மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, அரசமைப்பில் உள்ள முழு அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டு, அவை நடைமுறையில் முன்னெடுக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கித்தான் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்துக்கு வந்தது.

இப்போது அரசமைப்பு உருவாக்கத்தை அது பின் தள்ளி வைத்து விட்டது. ஆனால் வழங்கிய வாக்குறுதிப்படி மாகாண சபை தேர்தல்களையும் அது நடத்தவில்லை. மாகாண சபை செயற்பாடுகளையும் அரசமைப்பில் கூறப்பட்டபடி - 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டதன் பிரகாரம் - அதிகாரப் பகிர்வையும் முழுமையாக நடைமுறைப்படுத்தும் விதத்தில் அது முன்னெடுக்கவில்லை.

வந்ததும் செய்வோம் என்றார்கள். இப்போது வந்து ஒரு வருடம் கடக்கப் போகின்றது. முன்னைய அரசுகள் போல வாக்குறுதி வழங்கி இழுத்தடிக்கும் ஒரு தந்திரத்தைத்தான் இந்த அரசும் பின்பற்றுகின்றது.

ஆயினும், மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்தவும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ள முழு அதிகாரப் பகிர்வையும் மாகாண சபைகளுக்கு வழங்கி, அவற்றை நடைமுறையில் இயங்கச் செய்ய வைக்கவும், அரசுக்கு அழுத்தம் தீவிரமாக வரத் தொடங்கி உள்ளது.

ஏற்கனவே நேற்று முன்தினம் ஜெனிவாவில் தொடங்கிய ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 60ஆவது கூட்டத் தொடரின் முதல் நாளில், இலங்கை தொடர்பான விடயத்தின் மீது உரையாற்றிய பல நாடுகளும் - குறிப்பாக இந்தியா போன்றவை - மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்தவும், அரசமைப்பில்கூறப்பட்ட அதிகாரப்பகிர்வை முழுமையாக நடைமுறையில் ஏற்படுத்தவும் இலங்கையை வலியுறுத்திக் கேட்டுள்ளன.

அது மாத்திரமல்ல, இந்தத் தடவை இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்படவிருக்கும் பிரேரணையிலும் இந்த இரண்டு விடயங்களும் - மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதும், அரசமைப்பில் கூறப்பட்ட அனைத்து அதிகார பகிர்வுகளையும் மாகாண சபைகளுக்கு நடைமுறையில் வழங்குவதும் - வெளிப்படையாகவே வற்புறுத்தப்பட்டிருக்கின்றன.

அழுத்தங்கள் அதிகரிப்பதால் இவ் விடயத்தை சமாளிக்கப் புதிய தந்திரோபாயம் ஒன்றை தேசிய மக்கள் சக்தி கையில் எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே விலக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து, தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பு முழு அளவில் உள்ளது. இதற்கான சட்ட மூலம் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனால் பிரேரிக்கப்பட்டு, தயார் நிலையில் காத்திருக்கிறது. அரசாங்கம் இணங்கினால் இரண்டு வாரத்துக்குள் அந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து, உடனடியாக மாகாண தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட முடியும்.

ஆனால் அந்தத் தேர்தலை நடத்தவோ, வடக்கு - கிழக்கு மக்களிடம் அதிகாரங்களைக் கையளிக்கவோ விரும்பாத மற்றொரு பௌத்த - சிங்களப் பேரினவாத அரசன தேசிய மக்கள் சக்தி ஆட்சிப் பீடம், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்ற சாக்குப் போக்குக் காரணத்தைக் காட்டி, இந்த விடயத்தை இழுத்தடித்து, நடத்தாமல் செய்ய மும்முரமாக பணியாற்றுகின்றது. அதற்கானசதி நகர்வு திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படுகின்றது.

முன்னைய அரசுகள் போல தானும் அதே பௌத்த - சிங்கள பேரினவாதக் குட்டையில் ஊறிய மட்டைதான் என்பதை இந்நடவடிக்கை மூலம் தேசிய மக்கள் சக்தி நிரூபித்து நிற்கிறது.




(பகுதி - 04)

# சர்வதேச துடுப்பாட்ட மைதானம் மண்டைதீவில் சாத்தியமாகுமா?

- ந.லோகதயாளன் -

(நேற்றைய தொடர்ச்சி)

மண்டைதீவில் அமைக்க எண்ணும் சர்வதேச துடுப்பாட்ட மைதானமும் அதற்கான நிலமும் மட்டும் பெரிதல்ல. அதனோடு இணைந்த விடயங்களும் மிகப் பெரிதாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாகவே இதை எழுதுவதும் பகுதி நான்கையும் தாண்டி நீண்டு செல்கின்றது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டு தாபனத்தால் 1976 ஆம் ஆண்டு முதல் 1984ஆம் ஆண்டு வரையில் தமது ஆளுகையில் வைத்திருந்து மீள அரச பாவனைக்காக கையளிக்கப்பட்ட இந்த நிலத்தையே சர்வதேச துடுப்பாட்ட மைதானத்துக்காக வழங்கும்படியான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

2017 இல் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரும், பிரதி சபாநாயகருமான திலங்க சுமதிபாலவின் கோரிக்கைக்கு அமைவாக மண்டைதீவு கிழக்கு துஃ07 கிராம சேவகர் பிரிவிலேயே இந்த நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த மைதானத்தின் அமைவிற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் என்பவற்றோடு வேலணைப் பிரதேச சபையும் 2017-10-02 அன்று வழங்கிய இணக்கத்தின் அடிப்படையில் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் 2022 இல் 30 வருட காலக் குத்தகைக்கு நிலம் வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட 49 ஏக்கர் நிலம் போதாது எனக்கூறி தற்போது மேலும் நிலம் தேடும் படலமும் இடம்பெறுகின்றது. இதற்காக வேலணைப் பிரதேச சபைக்கு வழங்கிய 15 ஏக்கர் காணியில் வேலணைப் பிரதேச சபையானது வெறுமனே 5 ஏக்கர் காணியில் மாத்திரமே அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டுள்ளது. மிகுதி 10 ஏக்கர் காணியில் இன்னும் எந்தவொரு அபிவிருத்தியும் இன்றி காணப்படுவதனால் அந்த 10 ஏக்கர் நிலம் விளையாட்டு வலயத்திற்குள் அகப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

கிரிக்கெட் சபை அந்த இடத்தை ஒரு விளையாட்டுக் கிராமமாக மாற்றும்போது அதற்கு நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் காணி வேண்டும் எனக் கோரி நிற்கின்றனர்.

30 வருட குத்தகைக்கு வழங்கிய நிலத்தில் மைதானத்திற்கு அத்திவாரம் போடுவதற்கு முன்பே 3 ஆண்டு காலம் கடத்துவிட்டது. இதேநேரம் மைதானத்திற்காக ஒதுக்கப்பட்ட 49 ஏக்கர் நிலத்தின் பின்புறமாகவுள்ள தொடுவாய்க்கு அப்பால் ஓர் 30 ஏக்கர் நிலம் உள்ளது. அது இணைக்கப்பட்டு இந்தப் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டால் பார்ப்பதற்கு அழகு சேர்ப்பதாக அமையக்கூடிய தன்மை உள்ளபோதும், அது கிடைப்பதில் பெரிய சந்தேகம் உள்ளது. ஏனெனில் அந்த 30 ஏக்கரும் வனவளத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ளது.

மண்டைதீவில் 49 ஏக்கர் மட்டுமே கிடைக்கும் என்ற சமயம் நிலமும் போதாது, நீரும் போதாது என்ற பிரச்சினை எழுந்தபோது மாங்குளம் பகுதியில் விளையாட்டு மைதானத்தை அமைக்க நிலம் பார்க்கப்பட்டது. அந்த நிலம் வனவளத் திணைக்களத்தின் ஆளுகையில் இருப்பதனால் விடுவிக்க முடியாது என மறுக்கப்பட்டது. தற்போது மண்டைதீவு நிலத்தை மட்டும் வனவளத் திணைக்களம் விடுவிக்குமா என்ற கேள்விக்குப் பதில் கிடையாது.

தற்போது மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைக்க திட்டமிடும் நிலத்தை அடைவதற்கு முன்பு பிரதேச சபைக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்தை ஓர் முதலீட்டாளர் பெற்று அதில் பெரும் விடுதி அமைக்க சில அரச அதிகாரிகள் மூலம் முயன்றபோதும் பிரதேச சபை அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டது.

இவ்வாறெல்லாம் சாண் ஏறினால் முழம் சறுக்கும் விடயம் கடைசியில் ஒப்பேறுமா என்பது மிகப் பெரிய கேள்விக்குறிதான்.

(தொடரும்)



# கொழும்பில் 16 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக இலங்கைக் கொண்டுவரப்பட்ட 20 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, முகத்துவாரம் பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட நபர் ஒருவரைக் கைது செய்து அவரது வீட்டைச் சோதனையிட்ட போதே இந்த வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.



சந்தேகநபர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் டுபாயில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளார் எனவும், அதன்போது இந்த வெளிநாட்டு சிகரெட்டுகளை கொண்டு வந்துள்ளார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் மொத்தப் பெறுமதி 16 இலட்சம் ரூபா ஆகும்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முகத்துவாரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சம்மாந்துறை நெய்னாகாடு பகுதியில் நீரில் மூழ்கி 2 வயதுச் சிறுவன் சாவு!





**(தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெய்னாகாடு பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை 2 வயதுடைய சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

மரணமடைந்த சிறுவன் சிறாஜ் முகம்மட் ஸயான் ஸகி என அடையாளம் காணப்பட்டுள்ளான்.

சிசடலம் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்-ஜவாஹிர் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரட்டைக் கொலை துப்பாக்கிச்சூடு: மூன்று சந்தேகநபர்கள் சிக்கினார்கள்

இரட்டைக் கொலை துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் தங்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மித்தெனிய பொலிஸ் பிரிவின் தேக்கவத்த வீதிப் பகுதியில் 24.06.2025 அன்று இடம்பெற்ற இரட்டைக் கொலை துப்பாக்கிச்சூடு தொடர்பாக தங்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டபோதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை



விசாரணை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் எம்பிலிபிட்டிய பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 25 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தங்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டு மாவட்ட அனர்த்த நிவாரண சேவை அலுவலர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்ஷினி ஸ்ரீகாந்த் எற்பாட்டில் பழைய மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இதன் போது எதிர்வரும் பருவ பெயர்ச்சிக்கான முன்னாயத்தம், வறட்சிகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைள், குடி தண்ணீர் வழங்கல் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள பல வேலைத் திட்டங்கள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தை குறைப்பதற்கும் தடுப்பதற்குமான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும், எதிர்வரும் பருவ பெயர்ச்சி மழையின் போது வெள்ளத்தை குறைப்பதற்கும் தோனாக்களையும் வடிகால்கள்களையும் துப்பரவு செய்து நீர் வழிந்து ஒடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதிகாரிகளுக்க பணிப்புரை விடுத்தார்.











# மட்டு. சந்துருக்கொண்டான் படுகொலைகளின் உண்மைகளைக் கண்டறியவும் அகழ்வு செய்க!

## இராணுவ முகாம் பகுதியில் முன்னெடுக்கக் கோரி பொலிஸ் முறைப்பாடு

(வாலகிருஸ்ணா)

1990 காலப் பகுதிகளில் மட்டக்களப்பு சந்துருக்கொண்டான் பிரதேசம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள மக்களை - சிறுவர்கள், பெண்கள், பார பட்சமின்றி - விசாரணை என்ற பெயரில் அழைத்து சித்திரவதைக்குட்படுத்தி, படுகொலை செய்த கொடூரம் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அந்தப் பிரதேசத்தில் அக்காலத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவமுகாம் அமைந்த பகுதி அகழ்வு செய்யப்பட்டு இச்சம்பவம் தொடர்பான உறுதிப்படுத்தலை மேற்கொண்டு உரிய வர்களுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் எனவும் கோரி, சத்துருக் கொண்டான் படுகொலை நினைவேந்தல் குழுவினரால் நேற்றைய தினம் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் மற்றும் கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பா டொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சந்துருக்கொண்டான் படுகொலை இடம்பெற்று நேற்று 35 வருடங்கள் கடந்த சூழலில், இது தொடர்பிலான நீதியான விசாரணைகள் எதுவும் மேற் கொள்ளப்படாத நிலையில் யாழ் செம்மணி போன்று வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பல்வேறு படுகொலைகள் இடம்பெற்றுள்ளமையையும் அது தொடர்பான எச்சங்கள் மீட்கப்படுகின்ற விடயங்களையும் கருத்திற் கொண்டு இந்த முறைப்பாடு இக்குழுவினரால் முன்வைக்கப்பட்டது.

சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் குழுவின் தலைவர் வைரமுத்து குழந்தைவடிவேல், மட்டக் களப்பு மாநகர சபை உறுப்பினர்களான தயாள கௌரி. ரகுநாதன் மற்றும் சிவில் செயற்பாட்டாளர் லவகுகராசா ஆகியோர் சட்டத்தரணிகளான கமல்ராஜ், தவராஜா ஆகியோருடன் நேற்றைய தினம் காலை கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் இந்த முறைப்பாட்டைச் செய்தனர்.

இதற்கு முன்பாக மட்டக்களப்பு தலைமைய பொலிஸ் நிலையத்திற்கு சென்று இது தொடர்பிலான முறைப் பாடுகளை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை யெடுத்தபோது தலைமையக பொலிஸ ாரினால் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபரை சந்திக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்தன் பின்னர் குழுவினரால் படு கொலை நடைபெற்ற பிரதேசத்திற்குரிய பொலிஸ் நிலையமாகவுள்ள கொக்குவில் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி கொக்குவில், பனிச் சையடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண டான் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 85 பெண்கள், 10 வயதுக்கு உட்பட்ட 42 சிறுவர்கள், 25 வயோதிபர்கள் உட்பட 186 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும், ஒட்டுக்குழுவினராலும் இந்தப் படுகொலை அரங்கேற்றப்பட் டிருந்தது. இந்தப் படுகொலையின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றாகும்.

தமக்கான நீதி இந்த நாட்டில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை லயெனவும், தமக்கு சர்வதேச நீதிப் பொறிமுறையின் கீழ் இதற்கான விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டு நீதி வழங் கப்பட வேண்டும் எனவும் சத்துருக் கொண்டான் படுகொலை நினைவேந்தல் குழுவின் தலைவர் வைரமுத்து குழந் தைவடிவேல் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.

எவ்வாறாயினும் இராணுவமுகாம் இருந்த பகுதி அகழ்வு செய்யப்பட வேண்டும் என்பதற்காக இந்த முறைப்பாட் டினை பதிவுசெய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த அவர் -

இன்று பிள்ளையாரடி, சத்துருக் கொண்டான், பனிச்சையடி மற்றும் கொக்குவில் ஆகிய கிராமங்களில் இலங்கை இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் படுகொலை செய்யப்பட்ட மக்களின் 35 ஆவது ஆண்டு நிறைவாகும்.

இன்று நாங்கள் இந்த படுகொலைக் கான நீதியை மீண்டும் எதிர்பார்த்துக் கொண்டு இன்று சத்துருக்கொண்டான் ராணுவ முகாம் அமைந்த இடத்தை அகழ்வு பணி மேற்கொள்ள வேண்டும் என்று பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டை செய்துள்ளோம். இந்த முறைப்பாட்டை கொக்குவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனவே இதற்கான நீதி அரசாங்கத்தின் உள்ளக விசாரணையில் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. எனவே இந்த விடயம் ஒரு சர்வதேச பொறி முறைக்குச் சென்று விசாரணை செய் யப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின் றோம். இருப்பினும் இன்று இந்த நீதிக் காக நாங்கள் முறைப்பாட்டை செய்திருக் கின்றோம். இதற்கான நீதியை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றோம். - என் றார்.







# கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு காணி உறுதி வழங்க வேண்டும்

## சிறிதரன் எம்.பி. கோரிக்கை

“கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு முறையாக காணி அறுதி உறுதி பத்திரங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு உடன் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரிடம் கேள்வி எழுப்பி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.. அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நூறு வருடங்கள் கடந்துள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு முறையாக காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. உறுமய திட்டத்தில் வழங்கப்பட்ட பத்திரங்களும் அலுவலகங்களால் மீள பெற்றுக் கொள்ளப்படும் என கனி அரிசி உறுதிகளை வழங்க முடியாவிட்டால் தற்காலிகமாக வழங்கப்பட்ட உறுதி பத்திரங்களையாவது வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இந்த மாவட்டத்தில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள நிலையில் 12 ஆயிரத்திற்கும் இருக்கும் அதிகமான காணிகள் உள்ள நிலையில் அவர்களுக்கான கானி உறுதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? அதன்படி முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன்.”– என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க,

“கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே 1850 உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 477 விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளன. அதன்படி அந்த விண்ணப்பங்கள் ஏற்றவாறு காலை உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.”– என்றார்.

# ஐஸ் போதைப்பொருள் இரசாயணம் தொடர்பில் பொதுஜன பெரமுன பதற்றம் அடைந்துள்ளது

## பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு

ஐஸ் போதைப்பொருள் இரசாயனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, பொதுஜன பெரமுன பதற்றம் அடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முன்னதாக போதைப்பொருள் கடத்தல்காரரான மாக்கந்துரே மதுஷ், வெளிநாட்டில் இருந்து அழைத்து வரப்பட்டு கொல்லப்பட்டார்.

அவர், தம்முடன் தொடர்புடைய 80 அரசியல்வாதிகளின் விபரங்களை வெளியிடுவதாக கூறியதை அடுத்தே கொல்லப்பட்டார்.

எனினும் கெஹெல்பத்ர பத்மே உள்ளிட்டவர்களிடம் இருந்து போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் விபரங்கள் வெளிக்கொணரப்படும்.

நிமல் லான்சா போதைப்பொருளுடன்



கைது செய்யப்பட்டபோது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ, நேரடியாக சென்று அவரை விடுவித்தார்.

தற்போது போதைப்பொருள் குற்றச்சாட்டுக்கு உள்ளான உடன் சம்பத் மனம்பேரி கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

அன்று நிமல் லான்சாவுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. போதைப்பொருள் விநியோக வலையமைப்புக்கு உந்துதல் அளித்தவர்கள் அன்று அரசாங்கத்தினுள்ளேயே இருந்த தால் எந்த சட்டநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அதேநேரம், போதைப்பொருளுடன் கைதான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ விடுதலை செய்தார்.” என்றார்.

# ஐஸ் இரசாயன கொள்கலன்கள் பரிசோதனை செய்யப்பட்டன

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

ஐஸ் ரக போதைப்பொருள் உற்பத்தியுடன் தொடர்புடைய 2 கொள்கலன்களும் அங்கீகரிக்கப்பட்ட சுங்க செயன்முறை மூலம் விடுவிக்கப்பட்டன என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி கொள்கலன்கள் சுங்கத்தால் பரிசோதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டன என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இதில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் குறித்து சுங்கத் திணைக்களம் உள்ளக விசாரணையை மேற்கொண்டுவருவதுடன், குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு




வருவதாக அவர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மீது எழுந்த குற்றச்சாட்டுகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, அந்தக் கட்சி குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளித்தார்.

அத்துடன் இதுவே சம்பந்தப்பட்ட இருவரின் கட்சி உறுப்பினர் பதவிகள் உடனடியாக இடைநீக்கம் செய்யப்பட்டதற்குக் காரணமாக இருக்கலாமென தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# போதைப்பொருள் கொள்கலன்கள் தொடர்பில் உண்மைகளை மூடிமறைக்க அரசாங்கம் முயற்சி

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



போதைப்பொருள் கொள்கலன்கள் தொடர்பான உண்மைகளை மூடிமறைப்பதற்கு, பொதுஜன பெரமுன உள்ளிட்ட தரப்புகள் மீது அரசாங்கம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாம் திட்டமிட்ட குற்றச் செயற்பாடுகளை ஒழிக்குமாறு கூறுகிறோம். எனினும், அரசாங்கம் இந்த விடயத்தில் அரசியல் லாபம் பெற முயல்கிறது.

ஒட்டுமொத்த குற்றக்குழுக்களையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வழிநடத்துகிறது என்ற பிரசாரத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

ஆட்சியிலுள்ள இந்த அரசாங்கமே இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும், தற்போது துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

தற்போது, கொள்கலன்கள் பற்றி பேசப்படுகிறது, அந்த கொள்கலன்களை ஏதேனும் பறவைகள் தூக்கிச் சென்று மித்தெனியவில் வைத்திருக்க வாய்ப்பில்லை.

இந்த கொள்கலன் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன, அவை துறைமுகத்தில் நிச்சயமாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும்.

இந்த போதைப்பொருள் கொள்கலன்கள் தொடர்பில் இரண்டு தடவைகள் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளால் பாதுகாப்பு பிரிவினருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அரச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த புலனாய்வு அமைப்புகளில் இந்திய முகவரகமொன்றும் இருப்பதாகவும், முன்னதாக பல வெற்றிகரமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தகவல்களை மேற்கோள் காட்டி அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறான தகவல்கள் கடந்த வருடத்தின் இறுதியில் அல்லது இந்த வருடத்தின் ஆரம்பத்தில் வழங்கப்பட்டுள்ளன. இந்த தகவல் கிடைத்த போது, அந்த கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும், பின்னர் சுங்கத்தின் வசமிருந்த அவற்றை காவல்துறையினர் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளதாக அந்த அரச ஊடகத்தின் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

சோதனையின் பின்னரும் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ள இதனூடாக தெளிவாகின்ற நிலையில், பொதுஜன பெரமுன மீது அரசாங்கம் குற்றம் சுமத்துகிறது.

சுங்கத்தையும் காவல்துறையையும், குற்றக்குழுக்களையும் ராஜபக்ஷக்களே கட்டுப்படுத்துவதாக கூறப்படுகின்ற நிலையில், அரசாங்கம் என்ன செய்கிறது என்ற கேள்விகள் எழுகின்றன.

துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பான பொறுப்புகளை சுங்கம் ஏற்பதாக கூறியது. அந்த கொள்கலன்கள் சென்ற இடத்தை அறிந்துள்ளதாக அமைச்சரும் கூறினார்.

திட்டமிட்ட வகையில் இந்த விடயத்தை அரசாங்கம் மூடிமறைக்க முயற்சிக்கிறது, குற்றச்சாட்டை ராஜபக்ஷக்கள் மீது திருப்பிவிடுகிறது.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் தெரிந்தே இந்த கொள்கலன்களை விடுவித்து, பிரச்சினைகள் வரும்போது அரச அதிகாரிகளை பலிகடாவாக்க முயற்சிக்கின்றனர்.

பட்டியலில் இல்லாத ஒருவர் ஜனாதிபதி பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டார், இறுதியில் சிறைச்சாலை அத்தியட்சகருக்கே சிறைக்கு செல்ல நேரிட்டது. நீதி அமைச்சின் செயலாளர் குறித்து எந்த விசாரணையும் இல்லை.

அரசாங்கம் இந்த விடயத்தில் அரசியல் செய்யாமல் பக்கசார்பின்றி விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.” என்றார்.



# கெஹெலியவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி, 03 மகள்கள் மற்றும் மருமகன் ஆகியோருக்கு எதிராக நிதி தூய்தாக்கல் தடுப்புச் சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக லஞ்ச விசாரணை ஆணைக்குழு கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ். போதரகமவிற்கு நேற்று அறிவித்தது.

இதற்கமைய இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் விசாரணைக் குட்படுத்தப்பட்ட வழக்கின் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டன.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய பண்டார திசாநாயக்க ரம்புக்வெல்ல, அவரின் மனைவி குசும் பிரியதர்ஷனி ஏபா வேய்ஹேன, அவரின் மகள்களான சமித்ரி ஜயனிகா ரம்புக்வெல்ல, சந்துலா ரமாலி ரம்புக்வெல்ல, அமாலி நயனிகா ரம்புக்வெல்ல மற்றும் அவரது மருமகனான இசுரு புலஸ்தி பண்டார பொல்கஸ்தெனிய ஆகியோருக்கு எதிராக இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக லஞ்ச விசாரணை ஆணைக்குழு மன்றுக்கு அறிவித்தது.

கெஹெலிய ரம்புக்வெல்ல வெகுசன ஊடகம், சுகாதார மற்றும் சுற்றாடல் அமைச்சராக கடமையாற்றிய போது 2021‰2023 காலப்பகுதியில் பிரத்தியேக பணிக்குழாம் ஊழியர்களாக தமக்கு நெருங்கிய சிலரை நியமித்து அவர்களுக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளை தமது தனிப்பட்ட செலவுகள், அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு 80 லட்சம் ரூபாவிற்கும் அதிக இழப்பை ஏற்படுத்தினர் என கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



# நேபாளத்தில் உள்ள இலங்கையர்களுக்கு வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தல்

நாடு தழுவிய போராட்டங்களின் போது ஏற்படக்கூடிய தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, நேபாளத்தில் உள்ள இலங்கையர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, தங்குமிடங்களிலேயே இருக்குமாறு வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை தூதரக அதிகாரிகளை +977- 9851048653 என்ற எண் ஊடாக 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் உள்ள இலங்கையர்கள் தண்ணீர் மற்றும் உலர் உணவு மற்றும் தேவையான மருந்துகளை எப்போதும் அருகில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நிலைமையை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், நேபாளத்தில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் சில சமூகத் தலைவர்களுடன் தொடர்பில் இருப்பதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நேபாள அரசாங்கம் சமூக ஊடகங்கள் மீது தடை விதித்ததை தொடர்ந்து தலைநகர் காத்மண்டு உட்பட நேபாளத்தின் பிற நகரங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


# குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றார்

குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றார். அவர் 452 வாக்குகள் பெற்ற நிலையில், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுதர்சன் ரெட்டி 300 வாக்குகளை பெற்றிருந்தார்.

குடியரசு துணைத் தலைவர் தேர்தல், இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் அறை எண் எப் -101, வசுதா, முதல் மாடி என்ற முகவரியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தொடங்கியது. பிரதமர் நரேந்திர மோடி முதல் வாக்கை பதிவு செய்தார். 10 மணிக்கு முன்னதாகவே, நாடாளுமன்ற வளாகத்துக்கு வருகை தந்த அவர், தேர்தல் தொடங்கியதும் முதல் வாக்கை பதிவு செய்தார். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் ஆகியோர் தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர்.

அமித் ஷா, ராஜ்நாத் சிங், ஜெ.பி. நட்டா, நிதின் கட்கரி, அஸ்வினி வைஷ்ணவ், தர்மேந்திர பிரதான், கிரண் ரிஜிஜு, ராம் மோகன் நாயுடு, எல். முருகன் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் பொதுச்



செயலாளர் பிரியங்கா காந்தி, ஜெயராம் ரமேஷ் உள்ளிட்ட எம்.பிக்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர்.

இதேபோல், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர். அ.தி.மு.க. எம்.பிக்கள் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவாக வாக்களித்த நிலையில், தி.மு.க, விடுதலைச் சிறுத்தைகள், சி.பி.ஐ, சி.பி.எம். கட்சிகளின் எம்.பிக்கள் சுதர்சன் ரெட்டிக்கு ஆதரவாக வாக்களித்தனர். மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு நிறைவடைந்தது. 98 வீதத்துக்கும் அதிகமாக வாக்குப்பதிவு நடைபெற்றதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் 100 வீதம் வாக்களித்தனர் என ஜெயராம் ரமேஷ் தெரிவித்தார். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 315 எம்.பிக்களும் வாக்களித்தனர் என அவர் கூறினார். ஆம் ஆத்மி கட்சி எம்.பிக்கள் சுதர்சன் ரெட்டிக்கு ஆதரவாக வாக்களித்த நிலையில், அக்கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் ஸ்வாதி மாலிவால், சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார். பிஜு ஜனதா தளம் எம்.பிக்கள், தெலுங்கானா ராஷ்ட்ர சமிதி எம்.பிக்கள் உட்பட மொத்தம் 13 எம்.பிக்கள் இந்த தேர்தலில் வாக்களிக்கவில்லை.

மாலை 6 மணிக்கு வாக்கு எண்ணும் பணி தொடங்கியது. வாக்கு எண்ணும் பணி தேர்தல் அதிகாரியான மாநிலங்களவை செயலர் பி.சி. மோடியின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது. வாக்குகள் முழுவதுமாக எண்ணி முடிக்கப்பட்டதை அடுத்து, முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி, சி.பி. ராதாகிருஷ்ணன் 452 வாக்குகள் பெற்றுள்ளார். சுதர்சன் ரெட்டி 300 வாக்குகள் பெற்றுள்ளார். இதன் மூலம், சி.பி. ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவையைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் (வயது 68) சர்ச்சைகளில் சிக்காதவர். கடந்த 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றிபெற்று மக்களவைக்கு தேர்வானவர். மகாராஷ்டிர ஆளுநராக 2024 ஜூலை 31 முதல் பதவி வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றதை அடுத்து தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பிக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். சி.பி.ராதாகிருஷ்ணனின் சொந்த ஊரான திருப்பூரிலும் அவரது உறவினர்களும் ஆதரவாளர்களும் பட்டாசுகளை வெடித்தும், இனிப்புகளை வழங்கியும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.





## செப்டம்பர் 13 ஆம் திகதி முதல் விஜய் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம்

த.வெ.க. தலைவர் விஜய் எதிர்வரும் 13 ஆம் திகதி தனது அரசியல் சுற்றுப் பயணத்தை தொடங்க உள்ளார்.

இந்நிலையில், மாவட்டம் வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள இடங்களின் பட்டியல் வெளியாகியுள்ளது.

த.வெ.க. தலைவர் விஜய் செப்டம்பர் 13 ஆம் திகதி முதல் டிசம்பர் 20 ஆம் திகதி வரை வார இறுதி நாள்களில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்யவிருக்கிறார்.

விஜய்யின் தமிழகம் தழுவிய சுற்றுப்பயணத்துக்கு அனுமதி கேட்டு டி.ஜி.பி. அலுவலகத்தில் புஸ்ஸி ஆனந்த் மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில் விஜய்யின் சுற்றுப் பயண விவரம் வெளியாகியுள்ளது. விஜய் வார இறுதிகளில் குறிப்பாக சனிக்கிழமைகளில் மக்களைச் சந்தித்து பரப்புரை செய்யத் திட்டமிட்டுள்ளார்.

# சிறையில் வாழ முடியவில்லை எனக்கு விஷத்தை கொடுங்கள்!

## நீதிபதியிடம் நடிகர் தர்ஷன் முறையீடு

"பல நாள்களாக சூரிய ஒளியைப் பார்க்கவில்லை. எனது கைகளில் பூஞ்சை உருவாகியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் என்னால் உயிர் வாழ முடியாது. தயவுசெய்து எனக்கு விஷமாவது கொடுங்கள்."

- இவ்வாறு சிறையில் உள்ள நடிகர் தர்ஷன் நீதிபதியிடம் முறையிட்டார்.

பிரபல கன்னட நடிகரான தர்ஷன் தனது தோழியும் நடிகையுமான பவித்ரா கவுடாவை சமூக வலைதளத்தில் சீண்டிய தனது ரசிகர் ரேணுகா சுவாமி என்பவரை கடத்தி கொலை செய்த வழக்கில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் பவித்ரா கவுடா, தர்ஷனின் நண்பர்கள், ரசிகர் மன்ற தலைவர், பாதுகாவலர்கள் உள்பட மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் நடிகர் தர்ஷனுக்கு கடந்த ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதி கர்நாடக உயர் நீதிமன்றம் பிணை வழங்கியது. இதை எதிர்த்து கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் நடிகர் தர்ஷனின் பிணையை ரத்து செய்து அதிரடியாக உத்தரவிட்டது. அதுமட்டுமின்றி தர்ஷனுக்கு சிறையில் எந்த சிறப்பு வசதிகளும் செய்து கொடுக்க கூடாது என்று உச்ச நீதிமன்றம்



உத்தரவிட்டது. இதையடுத்து தர்ஷன் மீண்டும் கைது செய்யப்பட்டு பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ரேணுகாசாமி கொலை வழக்கில் பெங்களூர் சிறையில் உள்ள நடிகர் தர்ஷன் மாதாந்திர விசாரணையின் போது இன்று சிறையில் இருந்து காணொலி மூலம் 64 ஆவது சிட்டி சிவில் மற்றும் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

அப்போது பேசிய அவர், "பல நாள்களாக நான் சூரிய ஒளியைப் பார்க்கவில்லை. எனது கைகளில் பூஞ்சை உருவாகியுள்ளது. எனது உடையில் துர்நாற்றம் வீசுகிறது. இனி இதே போன்ற சூழலில் என்னால் இப்படி உயிர் வாழ முடியாது. தயவுசெய்து, எனக்கு விஷம் கொடுங்கள். இங்கு வாழ்க்கையை இப்படியே தொடர நான் விரும்பவில்லை" என்று அவர் கூறினார். இதற்கு பதிலளித்த நீதிபதி, "இது போன்ற விஷயங்களைச் செய்ய முடி யாது. அது சாத்தியமில்லை." என்று கூறினார்.



# நேபாளத்தில் பாரிய போராட்டங்கள்; ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகினர்

நேபாளத்தில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்றதையடுத்து, அந்த நாட்டின் ஜனாதிபதி ராம் சந்திர பவுடல் பதவி விலகியுள்ளார்.

முன்னதாக பிரதமர் அலுவலகத்தை நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டதை தொடர்ந்து நேபாள பிரதமர் கே.பி. சர்மா ஒலியும் பதவி விலகினார்.

அவர் பதவி விலகிய சில மணி நேரங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி ராம் சந்திர பவுடலும் பதவி விலகியுள்ளார்.

நேபாளத்தில் சமூக வலைதளங்களுக்கு விதிக்கப்பட்ட தடையும், அரசின் ஊழல் குற்றச்சாட்டுகளும் காரணமாக தொடங்கிய இளைஞர் போராட்டம் பெரும் கலவரமாக வெடித்துள்ளது.

தலைநகர் காத்மாண்டுவில், போராட்டக்காரர்கள் நேபாள நாடாளுமன்றக் கட்டடத்தையும், அமைச்சரவைக் கட்டடங்களையும் தீ வைத்ததோடு, பிரதமர் கே.பி. சர்மா ஒலியின் தனிப்பட்ட இல்லத்திற்கும், பல அமைச்சர்களின் வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டன.

மேலும் அரசு அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் சாலையில் நிறுத்தப்பட்ட வாகனங்களும் எரிக்கப்பட்டன.

26 சமூக வலைதள செயலிகளைத் தடைசெய்த அரசின் முடிவே போராட்டத்திற்கான தொடக்க காரணமாக அமைந்தது.

இளைஞர்கள் அந்தத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 19 இளைஞர்கள் உயிரிழந்தனர் என கூறப்பட்டது. இதனால் போராட்டம் தீவிரமடைந்து, அரசுக்கு எதிரான மக்களின் கோபம் வெடித்தது.

நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து நேபாள அரசு சமூக வலைத்தளத் தடையை மீளப் பெற்றாலும், மக்கள் எதிர்ப்பு தணியவில்லை.

இந்நிலையில், துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் பதவி விலக்கினார்.

அத்தோடு, அரசின் ஊழல் நடவடிக்கைகளை எதிர்த்து விவசாய அமைச்சரும் பதவியை விலகினார்.

எனினும் இளைஞர்களின் போராட்டம் இரண்டாம் நாளிலும் நீடித்து, கட்சி அலுவலகங்கள், அரசாங்கக் கட்டடங்கள், அமைச்சர்கள் வீடுகள் என பல இடங்களில் வன்முறை வெடித்தது.

பாதுகாப்புப் படைகள் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரத் தவறிய நிலையில், பொதுமக்களின் எழுச்சிக்கும், பரவலான போராட்ட அழுத்தத்திற்கும் இடையே நேபாள ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை, நேபாள முன்னாள் பிரதமர் ஜாலநாத் கனாலின் மனைவி ராஜ்யலட்சுமி சித்ரகார் கலவரத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

காட்மாண்டுவில் உள்ள அவர்களின் இல்லத்தை போராட்டக்காரர்கள் சூழ்ந்து தீவைத்ததில் கடுமையான தீக்காயங்களுக்கு உள்ளான அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.














# ஹமாஸின் சிரேஷ்ட அதிகாரிகளை குறிவைத்து கட்டார் தலைநகரில் இஸ்ரேல் வான் தாக்குதல்

கட்டார் தலைநகர் டோஹாவில் ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட அதிகாரிகளைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளும், பாதுகாப்பு நிறுவனமும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த தாக்குதலில் ஹமாஸின் டோஹா பணியகத் தலைவர் கலீல் அல்ஹையா உள்ளிட்ட தலைவர்கள் குறிவைக்கப்பட்டனர் என கூறப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ள கட்டாரின் வெளிவிவகார பேச்சாளர் மேஜித் அல் அன்சாரி, இதை பயம் கலந்த குற்றச் செயல் என்றும், சர்வதேச சட்டங்களையும் ஒழுங்குகளையும் முற்றிலும் மீறியதாகும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, கட்டாரில் உள்ள ஹமாஸ் பேச்சுவார்த்தையாளர்கள் தான் இந்த தாக்குதலில் குறிவைக்கப்பட்டனர் என ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தாக்குதலுக்குப் பிறகு, இஸ்ரேல் பாதுகாப்புத் துறை மற்றும் Shin Bet பாதுகாப்பு முகமை கூட்டணியில் துல்லியமான தாக்குதல் நடத்தியதாக அறிவித்துள்ளது.

இஸ்ரேல் அறிக்கையில், இந்த ஹமாஸ் தலைமை உறுப்பினர்கள் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7இல் நடந்த தாக்குதலுக்கு நேரடி பொறுப்பாளர்கள் என்றும் இஸ்ரேல் நாட்டிற்கு எதிரான போர் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தவர்கள் என்றும் கூறியுள்ளது.

மேலும், தாக்குதலுக்கு முன் கலீல் அல்ஹையா கட்டாரி பிரதமர் ஷெய்க் முகம்மத் பின் அப்துல்ரஹ்மான் அல்-தானிஜ சந்தித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில், டோஹாவில் பல வெடிச்சத்தங்களும் கடும் புகைமூட்டமும் எழுந்ததால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது என தெரிவிக்கப்படுகிறது.








# இன்றைய ராசி பலன்கள் -10.09.2025




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூட எளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.உன்கள் துணையை நட்கு புரிந்துகொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.

என்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது என்னும் உங்கள் நம்பிக்கையே இன்று உங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.




சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது.




நல்லசிந்தனைமூலம்சிறப்பானசெயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். சளி மற்றும் நரம்பு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




சில சமயங்களில் அமைதியின் மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமையான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை உங்களுக்கு கவலையை அளிக்கும்




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும். நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும். உடற்பயிற்சி மூலம் நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.




பிரார்த்தனைமற்றும்இறைவழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உறுதியுடன் இருக்க வேண்டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணியாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம். மன உளைச்சலுக்கு இடம் அளிக்காதீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் -10.09.2025




ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சிவசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.




இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும். எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்யம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதற்றம் ஏற்படலாம்.

# அரசியல் சார்பு கலாசாரத்தை அரசு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க பெருமிதம்

அரசியல் சார்பு கலாசாரத்தை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 704 ஊழியர்களுக்கு நிரந்தர நியமன கடிதங்களை வழங்கும் நிகழ்ச்சியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இப்போது நடைபெறும் அனைத்து நியமனங்களும் கட்சி, இனத்திற்குப் பிணைக்கப்படாமல் சமமான முறையில் வழங்கப்படுகின்றன.

கடந்த காலத்தில் அரசாங்கங்கள் ஆள்சேர்ப்புகளில் அரசியலை திணித்து பொதுமக்களின் பணத்தை வீணடித்தன. செப்டம்பர் 21 ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணை நாட்டை புதிய பாதையில் நகர்த்தியது.

ஊழல் நிறைந்த காலம் முடிந்து, சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு உறுதியான அரசாங்கம் உருவாகியுள்ளது.




அரசாங்கம், தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும்.இதன் மூலம் குடிமக்கள் நாட்டின் நலனுக்கு, கூட்டு முன்னேற்றத்தில் பங்களிக்க வேண்டும்” – எனவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்